(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, it is a very big tank and the entire Hosur Town depends upon this tank for drinking and other purposes. Once it is filled there would be water for two or three years, but on account of the silt there, its capacity is going down every year and the people suffer. This year it is empty. So, if the local panchayat or panchayat union has no funds, may I request the Hon. Minister to ask at least the Public Works Department to undertake the work so that the people may not suffer ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இது பெரிய டாங்காக இருந்தாலும் அதிலேயிருக்கிற தண்ணீர் 32 மில்லியன் கன அடிதான் மழை பெய்தால் சேருகிறது. அதற்கு பாசனம் 80 எக்கர் இருக்கிற காரணத்தாலே, அந்த பாசனத்திற்கான நீர் அதற்கு போத வில்லை என்ற காரணத்தினுல்—முன்னே எஸ்டிமேட் போட்டிருக்கிறுர்கள் அங்கேயிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று. பின்னர் அது பாசனத் திற்குத்தான் தகுதி என்பதால்—அதை கைவிட்டு விட்டார்கள். இப் பொழுது ரூ. 32·78 இலட்சத்துக்கு எஸ்டிமேட் போட்டு, ஒசூர் மற்றும் மத்தகிரி பேரூராட்சி மற்றும் அரசு கால்நடை பண்ணை ஆகியவைகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் இணைந்துள்ளது. அரசு கால்நடை பண்ணைக்கு கொடுக்க இருக்கும் 0·25 மில்லியன் லிட்டருடன் சேர்த்து சுமார் 4·24 மில்லியன் லிட்டர் தண்ணீருக்காகத் திட்டம் போட்டிருக்கிறுர்கள். அதை சி.இ. பாஸ் செய்திருக்கிறுர்கள். பஞ்சாயத்து யூனியன் அதற்கான ஒப்புதலை தருமானுல் நிச்சயமாக அந்த வேலை செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்

மருங்கூர்—தோவாளை சாலை

*613 வினு.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலூகா, மருங்கூரிலிருந்து காமநாயக்கன்புதூர் வழியாக தோவாளைச் சானலுக்கு செல்லும் சாலை யினைச் செப்பனிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் இச்சாலையை மேம்படுத்த ஆவன செய்து கொண்டிருக்கிறது.

திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : தலைவரவர்களே, இந்த அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்தின் நிதி நிலைமை அதைச் சரிவர பழுதுபார்க்க இடம் கொடுக்கவில்லையென்று கூறப்படுகிறது. ஆகவே, அந்த ரோடை நெடுஞ்சாலை இலாகாவிடம் ஒப்படைத்து, அந்த நெடுஞ்சாலை இலாகா மூலமாகப் பழுதுபார்க்கவும், அதன் குறுக்கே போகிற தோவாளை சாலையின் மேல் பாலம் கட்டவும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அதன் மொத்த நீளம் 2·4 கிலோ மீட்டர். 1973–74-ல் 1 கிலோ மீட்டர் முடிந்திருக்கிறது. 1974–75-ல் இன்னொரு கிலோ மீட்டர் முடிந்திருக்கிறது. மீதியுள்ளது 0·4 கிலோ மீட்டர். அதையும் பஞ்சாயத்து யூனியன் முடிக்கத் தீர்மானித்திருக்கிறது. முடித்துவிடுவார்கள்.

சாக்கடைத் துப்புறவுப் பணி

*614 வினா.—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) இந்த ஆண்டு, சனவரித் திங்களில், சாக்கடைத் துப்புறவுப் பணியில் ஈடுபட்ட மூன்று ஊழியர்கள் விஷ வாயுவில் இறந்துவிட்டனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இனியாவது அம்மாதிரி ஏற்படாமல் இருக்க அரசு எடுக்க இருக்கும் பாதுகாப்பு நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) சாக்கடைத் துப்புரவுப்பணியில் ஈடுபடும் தொழிலாளி வேலையில் இறங்கும் முன்னர் முன்னெச்சரிக்கையாக ஒரு கயிற்றினை தன் தோளைச் சுற்றியும், இடுப்பைச் சுற்றியும் கட்டிக் கொண்டுள்ளாரா என்று உறுதி செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு அவர், கயிற்றினைக் கட்டிக் கொண்டிருப்பின் அபாயம் ஏற்படுங்கால், அவரை மேலே இழுத்துவிடலாம். வாயு முகமூடி அணிந்து கொள்ளுதல், ஆழமான சாக்கடை அடைப்புகளை நீக்குவதற்கான சாதனங்களை உபயோகிப்பது போன்ற நவீன பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆய்வில் உள்ளன.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்தச் சாக்கடைத் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்கள் ஏற்கெனவே மிக தரித்திரப்பட்ட நிலையிலுள்ளவர்களாக இருப்பார்கள். இறந்த அந்த 3 தொழிலாளிகள் குடும்பங்களுக்குப் பாதுகாப்பு நிதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அவர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதி ரூபாய் 10,000 கிடைத்ததா ? அல்லது வேறு ஏதாவது உதவி செய்யப்பட்டதாவென்பதை அறிய விரும்பு